

நெல்லை மாவட்டம் பாளை சிறைச்சாலை எதிர்புறம் உள்ள பிளாரன்ஸ் சுவேன்சன் மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியினை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், ராபர்ட் புரூஸ் எம்.பி., மேயர் ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வகாப், ரூபி மனோகரன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தனர்.



மதுரை மாநகர் மாவட்டம் 78 வது வட்டச் செயலாளர் ஆ.ராம்பிரசாத் இல்ல விழாவினை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமை ஏற்று நடத்தி வைத்து அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுச்சாமி மற்றும் திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# புதிய அமைச்சர்களுக்கு - துறைகள் ஒதுக்கீடு!






சென்னை, அக். 01-

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்ட 4 பேருக்கும் துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள செந்தில் பாலாஜிக்கு ஏற்கெனவே அவர் வகித்து வந்த மின் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் ஆர்.ராஜேந்திரனுக்கு சுற்றுலாத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கரும்பு, கரும்பு ஆயத்தீர்வை மற்றும் கரும்பு பயிர் மேம்பாடு ஆகிய துறைகளும் ராஜேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சா.மு.நாசருக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயலகத் தமிழர் நலன் ஆகிய துறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் கோவி. செழியனுக்கு தொழில்நுட்பக்கல்வி உள்ளிட்ட உயர்கல்வித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் வாழ்த்து!



லக்னோ, அக்.01-


துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்திரப்பிரதேச மாநில முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், "தமிழ்நாடு துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள்!. புதிய பொறுப்பில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட வாழ்த்துகிறேன்" என்றுகுறிப்பிட்டுள்ளார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!

## தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார்!



சென்னை, அக்.01-

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் பொறுப்பு நேற்று முன்தினம் வழங்கப் பட்டதறிவோம்.

புதிய துணை முதலமைச்சராகப் பதவி உயர்வு பெற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலரும் நேரில் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் அலைபேசி மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்து!

## வலைதளத்தில் பதிவு!



சென்னை, அக்.01-

துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் துணை முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தாங்கள், இன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், தமிழக மக்களின் மீதும் உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளீர்கள் அவர்கள் இருவருக்கும் நீங்கள் உண்மையாக சேவை செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு கலைஞானி கமல்ஹாசன் பதிவிட்டுள்ளார்.

